**சுருக்கம்**

தொழில் நுட்பக் கல்வித் துறை – அரசினர் பொறியியற் கல்லூரிகள் – அரசினர் பாலிடெக்னிக்குகள் மற்றும் சிறப்புப் பயிலகங்கள் – விடுப்பு அனுமதி – அதிகாரம் ஒப்படைப்பு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (சி.2)துறை

அரசாணை (நிலை)எண்.500 நாள்: 28–12–1999

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை)எண்.2648, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 4–12–1982
2. அரசாணை (நிலை)எண்.512, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 4–5–1984
3. அரசாணை (நிலை)எண்.,1120, கல்வி, நாள் 3–8–1990
4. தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கடிதங்கள் எண்.2723/ ஏ1/99, நாள் 21–1–99, 11–2–99 மற்றும் 2–10–99

*****

**ஆணை:–**

தற்போது உள்ள அதிகார ஒப்படைப்புகளின்படி தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சார்ந்த பல்வேறு வகை அலுவலர்களுக்கும், தனிவகை இயலாநிலை விடுப்பு (Special Disability Leave) மற்றும் படிப்பு விடுப்பு (Study Leave) தவிர பிறவகை விடுப்புகள் இன்னமும் தொழில் நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்களாலேயே வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனால் இப்பணிகள் தொடர்பாக பெரிய அளவில் கடிதப் போக்குவரத்தும் எழுத்துப் பணிகளும் நடைபெற்று வருவதுடன் தவிர்க்கப்பட வேண்டிய காலதாமதமும் காணப்படுகிறது. விடுப்பு அனுமதி என்பது தற்போது ஒரு வாலாயப் பணியாகவே உள்ளது. இதில் மேலும் அதிக அளவில் சார்நிலை அலவலர்களுக்கு அதிகார ஒப்படைப்பு வழங்கி உடனுக்குடன் அனுமதிக்கப்படுவது சிறந்தது என தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். இதனால் சார்நிலை அலுவலகங்கள் மற்றும் இயக்ககத்தில் தேவையற்ற கடிதப் போக்குவரத்துக்கள் பெருமளவு குறையும் எனவும் பணியாளர்களுக்கு விடுப்பு/ சரண் விடுப்பு ஆகியவற்றை உடனுக்குடன் வழங்க இயலும் எனவும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள உயர்நிலை அலுவலர்களான கூடுதல் இயக்குநர் / இயக்குநர் ஆகியோர் இத்தகைய வாலாயப் பணிகளுக்காகச் செலவிடும் நேரம் மிச்சமாகி பிற முக்கிய பணிகளில் அதிக கவனம் செலுத்த இயலும் எனவும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. எனவே, ஏற்கனவே இருந்துவரும் நடைமுறைகளுக்குப் பதிலாக தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கு இயலாநிலை விடுப்பு மற்றும் படிப்பு விடுப்பு தவிர மற்ற அனைத்து வகை விடுப்புகளும் வழங்குவதற்கு (சரண் விடுப்பு உட்பட) கீழ்க்கண்டவாறு புதிதாக அதிகார ஒப்படைப்பு வழங்கி ஆணை பிறப்பிக்கும்படி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா.

| வ.எண் | விடுப்பு வழங்க அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (தனிவகை இயலா விடுப்பு மற்றும் படிப்பு விடுப்பு நீங்கலாக) | எந்தெந்த அலுவலர்களுக்கு விடுப்பு வழங்கலாம் | எவ்வளவு விடுப்பு வழங்கலாம் |
|---|---|---|---|
| 1. | தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் | 1.அரசினர் பொறியியற் கல்லூரி முதல்வர்கள் | முழு அதிகாரம் |
| | | 2.அரசு பாலிடெக்னிக் மற்றும் சிறப்பு பயிலக முதல்வர்கள் | 30 நாட்களுக்கு மேற்பட்டவை |
| | | 3. இயக்ககத்தில் கூடுதல் இயக்குநர் தகுதிக்கு கீழ் உள்ள அனைத்து ஏ பிரிவு அலுவலர்கள் | 30 நாட்களுக்கு மேற்பட்டவை |
| 2. | தொழில் நுட்பக் கல்வி கூடுதல் இயக்குநர் (பாலிடெக்னிக்) | 1. அரசு பாலிடெக்னிக் மற்றும் சிறப்பு பயிலக முதல்வர்கள் | 30 நாட்கள் வரை |
| | | 2.இயக்ககத்தில் கூடுதல் இயக்குநர் தகுதிக்கு கீழ் உள்ள அனைத்து ' ஏ ' பிரிவு அலுவலர்கள் | 30 நாட்கள் வரை |
| | | 3. இயக்ககத்தில் கூடுதல் இயக்குநர் தகுதிக்கு கீழ் உள்ள அனைத்து 'பி' பிரிவு அலுவலர்கள் | முழு அதிகாரம் |
| | | 4. தொழில் நுட்பக் கல்வி கோட்ட/உட்கோடங்களில் பணிபுரியும் தொழில் நுட்பக் கல்வி துறையைச் சார்ந்த ' பி ' பிரிவு அலுவலர்கள் | முழு அதிகாரம் |
| 3. | தொழில் நுட்பக் கல்வி உதவி இயக்குநர் (நிர்வாகம்) | 1.இயக்ககத்தில் உள்ள அனைத்து சி பிரிவு மற்றும் டி பிரிவு பணியாளர்கள் | முழு அதிகாரம் |
| | | 2. தொழில் நுட்பக் கல்வி கோட்ட /உட் கோட்டங்களில் பணிபுரியும் தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சேர்ந்த சி பிரிவு அலுவலர்கள் | முழு அதிகாரம் |

| | | | |
|---|---|---|---|
| 4 | அரசினர் பொறியியற் கல்லூரிகள் முதல்வர்கள் | 1.கல்லூரியில் முதல்வருக்கு கீழ் உள்ள அனைத்து ஏ மற்றும் பி பிரிவு அலுவலர்கள் | முழு அதிகாரம் |
| | | 2.முதல்வரின் நேர்முக உதவியாளர் இல்லாத கல்லூரிகளில் அனைத்து சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள் | முழு அதிகாரம் |
| 5. | அரசினர் பாலிடெக்னிக் மற்றும் சிறப்புப் பயிலக கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் | 1.பயிலகத்தில் முதல்வருக்கு கீழ் உள்ள அனைத்து ஏ மற்றும் பி பிரிவு அலுவலர்கள் | முழு அதிகாரம் |
| | | 2.முதல்வரின் நேர்முக உதவியாளர் இல்லாத பயிலகங்களில் அனைத்து சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள் | முழு அதிகாரம் |
| 6. | அரசினர் பொறியியற் கல்லூரி அரசினர் பாலிடெக்னிக் மற்றும் சிறப்புப் பயிலக நிறுவனங் களின் முதல்வரின் நேர்முக உதவியாளர் | கல்லூரி / பயிலகத்தைச் சேர்ந்த அனைத்து சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள் | முழு அதிகாரம் |
| 7. | தொழில் நுட்பக் கல்விக் கோட்ட செயற்பொறி யாளர்கள் | 1.கோட்டம் / உப கோட்டத்தில் பணிபுரியும் தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சேர்ந்த பி மற்றும் சி பிரிவு பணியாளர்கள் | 30 நாட்களுக்கு மிகாமல் |
| | | 2. தொழில் நுட்பக் கல்வி கோட்டம்/ உட் கோட்டத்தில் பணிபுரியும் தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சேர்ந்த டி பிரிவு அலுவலர்கள் | முழு அதிகாரம் |

3. இப்பொருள் குறித்து பரிசீலித்த அரசு, மேலே பத்தி 2-ல் உள்ள அட்டவணையில் உள்ளபடி விடுப்பு வழங்கும் அதிகாரத்தை ஒப்படைக்காலாமென கருதி அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், பணியாளர்களுக்கு இயலாநிலை விடுப்பு, படிப்பு விடுப்பு மற்றும் வெளிநாடு செல்ல விடுப்பு ஆகியவற்றை வழங்கும் அதிகாரம் அரசிற்கு மட்டுமே உள்ளது என்பதை கருத்திற்கு கொள்ளுமாறு தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை பணியாளர் (மற்றும்) நிர்வாக சீர்திருத்தத் துறையின் 24.12.99 நாளிட்ட 70515/எட்.ஆர்.3/99–1, என்ணின்படி வெளியாகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ட.செல்வம்
அரசு செயலாளர்

பெறுநர்

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 25
கூடுதல் இயக்குநர், (பாலிடெக்னிக்) தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சம்பந்தப்பட்ட அலுவலர்கள், (தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை – 18 / 35
சம்பளம் (ம) கணக்கு அலுவலர், சென்னை – 35 / 79 / 9, மதுரை
அனைத்து அரசு பொறியியற் கல்லூரி முதல்வர்கள் (தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
அனைத்து முதல்வர்கள், அரசு பாலிடெக்னிக் (ம) சிறப்பு பயிலகங்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக
அனைத்து கருவூல அலுவலர்கள்,
இயக்குநர், கருவூலம் (ம) கணக்கு துறைகள், சென்னை – 15
நகல்:அனைத்து பிரிவுகள், உயர்கல்வி துறை, சென்னை – 9
நிதி / பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை – 9
இருப்புக்கோப்பு / உதிரிகள்
நகல் அரசாணை நிலை எண்.2648, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 4–12–82

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.